செ.வெ.எண்: 548 நாள்: 05.09.2020

## தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் முழுநேர சமையல் பணி புரிய விண்ணப்பக்க மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ,ப அவர்கள் அழைப்பு

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் முழுநேர சமையல் பணி புரிய விருப்பம் உள்ளவர்கள், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் உள்ள மாதிரி விண்ணப்ப படிவத்தின்படி, பூர்த்தி செய்து, உரிய சான்றிதழ்களின் நகல்கள் இணைத்தும், சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி, மேற்படி, அலுவலகத்தில் 18.09.2020 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைத்திடுமாறு, தபாலிலோ அல்லது நேரிலோ, அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முகவரி தவறாக இருந்து, அழைப்பாணை திரும்ப பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் மீது அரசு பரிசீலிக்காது எனவும் மனுதாரரே முழுப்பொறுப்பு எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கல்வி விடுதிகளில் காலியாக உள்ள சமையலர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு

| வ. எண் | பதவி | காலிப் பணியிடம் | ஊதியம் | இன சுழற்சி எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| | | | | Priority | Non - Priority |
| 1 | சமையலர் (ஆண்) | 14 | அரசாணை எண். 303, நிதித்துறை நாள்- 11.10.17-ன் படி புதிய ஊதியம் ரூ.15700/-மற்றும் இதர படிகள் | GT – 1<br>BC – 1<br>BCM - 0<br>SC – 0<br>SCA – 0<br>MBC/DNC – 1<br>ST - 1 | GT – 3<br>BC – 2<br>BCM –1<br>SC – 2<br>SCA – 0<br>MBC/DNC – 2<br>ST - 0 |
| 2 | சமையலர் (பெண்) | 5 | அரசாணை எண். 303, நிதித்துறை நாள்- 11.10.17-ன் படி புதிய ஊதியம் ரூ.15700/- மற்றும் இதர படிகள் | GT – 1<br>BC – 0<br>BCM – 0<br>SC – 1<br>SCA – 0<br>MBC/DNC – 0<br>ST - 0 | GT – 0<br>BC – 2<br>BCM – 0<br>SC – 0<br>SCA – 0<br>MBC/DNC – 1<br>ST-0 |

**(BC -Non -Priority -ல் ஒரு பணியிடம் முன்னாள் இராணுவத்தினருக்கு ஒதுக்கப்படுகிறது)**

மேற்கண்ட சமையலர் (ஆண்/பெண்) காலிப்பணியிடங்கள் நேர்காணல் மூலம், இனச்சுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. இதற்காக பின்வரும் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1) தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
2) சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் தரமாகவும், ருசியாகவும் சமைக்கத் தெரிந்திருக்கவேண்டும்.
3) வயது வரம்பு - 01.07.2020 தேதியில் SC/ST – 18 முதல் 35, BC, BCM, MBC, & DNC - 18 முதல் 32, இதர பிரிவினர் 18 முதல் 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளில் அனுமதிக்கப்பட்டவாறு வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.

மேற்கண்ட தகுதிகளுடன் முழுநேர சமையல் பணி புரிய விருப்பம் உள்ளவர்கள், விண்ணப்பங்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்தராவ் இ.ஆ,ப அவர்கள் தெரிவித்துள்ளார்